## கால்நடை பராமரிப்புத் துறை
## " கால்நடை வளர்ப்பிற்கு
## அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம்"

கால்நடைகளின் உற்பத்தி திறனுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் இன்றியமையாத காரணிகள் ஆகும். பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு கறவை மாடுகளுக்கு தேவையான அளவு பசுந்தீவனம் வழங்குவது மிகவும் இன்றியமையாதது. கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவீனத்தில் 65-70 விழுக்காடுகள் தீவனம் மற்றும் பசுந்தீவன உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. கால்நடைகளுக்கு பசுந்தீவனத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே மிக பெரிய இடைவெளி உள்ளது.

ஆகவே தீவனப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும் கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழக அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் விருதுநகர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய கீழ்கண்ட தீவனப்பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

அ) இறவையில் பல்லாண்டு உயர்ரக கலப்பின கம்பு நேப்பியர் தீவனப்புல் 450 ஏக்கரில் சாகுபடி செய்திட புல்கரணைகள் வழங்குதல் (பயனாளிக்கு அதிகபட்சம் 1 ஏக்கர்)

ஆ) மானாவரியில் 2500 ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம் மற்றும் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்திட தீவன விதைகள் வழங்குதல் . (பயனாளிக்கு அதிகபட்சம் 2 ஏக்கர்)

இ) முன்னோடி விவசாயிகளின் நிலங்களில் 25 ஏக்கர் பரப்பளவில் தீவனச்சோளம் மற்றும் தட்டைப்பயிறு விதை உற்பத்தி அலகு அமைத்தல் .

ஈ) மின்சாரத்தால் இயங்கும் புல்வெட்டும் கருவி 25 எண்ணம் (60% மானியம் மற்றும் 40% விவசாயிகளின் பங்களிப்பு

உ) மர வகை தீவனத்தின் முக்கியத்துவதை உணர்த்த அகத்தி, சூபா புல் மற்றும் கல்யாண முருங்கை போன்ற 30000 எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்குதல் .

ஊ) அசோலா திடல் 200 எண்ணம் அமைக்க ரூ.2500 ( 100 சதம் மானியம்) (ஒவ்வொரு அதிகபட்சம் 2 அசோலா அலகுகள்)

எ) தீவனப்பயிர் அதிக அளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து, பதப்படுத்தி, ஊறுகாய் புல் (Silage)–ஆக கால்நடைகளுக்கு தீவனப்பற்றாகுறை காலங்களில் வழங்குவதற்கு 250 கிலோ கொள்ளளவு உடைய 4 சைலேஜ் பைகள் வீதம் 125 பயனாளிகளுக்கு மொத்தம் 500 அலகுகள் இலவசமாக வழங்கப்படும்.

எல்லா இனங்களிலும் 30 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட / பழங்குடி பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். மேலும், மேற்காணும் அனைத்து இனங்களிலும், 50 சதவிகிதம் பயனாளிகள் பால் கூட்டுறவு சங்கங்களின் பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன் பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் /ஆவின் பொது மேலாளரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெற விருப்பமுள்ள திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக விண்ணப்பம் அளித்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியர்
விருதுநகர்